

சிவகங்கை மாவட்டம், மருது பாண்டியர்களின் 224–வது நினைவு தின அரசு விழாவினை முன்னிட்டு, திருப்பத்தூரில் பேருந்து நிலையம் அருகில் உள்ள மருது பாண்டியர்களின் நினைவுத்தூணிற்கு, அமைச்சர்கள் இ.பெரியசாமி, கேஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், முனைவர். பழனிவேல் தியாகராஜன், சிவ.வீ.மெய்யநாதன், டாக்டர்.டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் அரசின் சார்பில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., ஆயுஷ் வெங்கட் வட்ஸ், திருமதி கோகிலாராணி உட்பட பலர் உள்ளனர்.

### திராவிடர் கழகம் சார்பில் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு விழா!

# முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் முனுஆதி நூற்றாண்டு விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையுரையாற்றுகிறார்!

சென்னை, அக். 26-

திராவிடர் கழகம் சார்பில் தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் தலைவர் முனு ஆதி அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் ஆவணக் கொலைகள் தடுப்புக்கான சட்டம் இயற்ற ஆணையம் அமைத்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா நாளை (27.10.2025- திங்கட்கிழமை), மாலை 5.00 மணி இராஜகோபால் திருமண மண்டபம், துரைசாமி ரெட்டி தெரு, மேற்கு தாம்பரத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு ப.முத்தையன் வரவேற்புரையாற்றுகிறார்.

மக்கள்தாசன், வி.ஆர். சிவராமன், தா.கிருஷ்ணா, கோ.நாத்திகன், பொறியாளர் ப.சாமுவேல் எபிநேசர், துரை.மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சி.மகேந்திரன், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மீ.அ.வைத்திய லிங்கம், எம்.யாக்கூப், க.வசந்த குமாரி, கோ.காமராஜ், வீ. பன்னீர் செல்வம் ஆகியோர் நினைவுரை யாற்றுகிறார்.

இதில் அனைத்துக் கட்சித் தலைவர்கள், பிர முகர்கள் கலந்துகொள்கிறார்கள்.

ஆதிமாறன் நன்றி கூறுகிறார்.

### காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதியில்

# 6 கிராமங்களில் 3,500 மரக்கன்றுகள் நடுதல்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

காஞ்சிபுரம், அக். 26 -

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதியில் 6 கிராமங்களில் 3,500 மரக்கன்றுகள் நடும் பணியினை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பணியினை தொடங்கி வைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்திற்குட்பட்ட கடல்மங்கலம், தோட்ட நாவல், சடிச்சிவாக்கம், இடையம்புதூர், சாலவாக்கம், நெல்லிமேடு ஆகிய கிராமங்களில் உள்ள 6 கிராம சாலையோரங்களில் 3500 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நேற்று (26.10.2025) காலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்து, 3,500 மரக்கன்றுகள் நடும் பணியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியல் ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி. குமார், பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல், ஒன்றியக் குழு உறுப்பினர் சசிகுமார், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் கவிதா, உதவி செயற்பொறியாளர் விக்டர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சூர்யா, மாணிக்கவேல், பொறியாளர்கள் கலைச்செல்வன், ஜோதி, பொதுக் குழு உறுப்பினர் சசிகுமார், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், திமுக நிர்வாகிகள் வீராசாமி, ருத்ரகோட்டி, ஜெயக்குமார், வெங்கடேசன், மாயகிருஷ்ணன், பார்த்திபன், நதியா கோபி, பாலமுருகன் முரளி, விஷ்ணு, நந்தா, ஏழுமலை, கோகுல், குமரவேல், ஊராட்சி மன்ற தலைவர்கள் சத்தியா சக்திவேல், நாகம்மாள் மாரி, அமுதா தமிழ் வேந்தன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தலைமை பொதுக்குழு உறுப்பினர் – மறைந்த

# மேடவாக்கம் ப.ரவி இறுதி ஊர்வலம்!

## அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் - கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பு!



சென்னை, அக்.26-

சென்னை தெற்கு மாவட்டம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் தாமஸ் மலை ஒன்றிய கழக முன்னாள் செயலாளர் மேடவாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஒன்றிய கவுன்சிலர் மேடவாக்கம் ப. ரவி அவர்கள் அக்டோபர் 22ஆம் தேதி உடல் நலக் குறைவால் மரணம் அடைந்தார். இந்தச் செய்தி அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சர் அவர்கள் மேடவாக்கத்தில் உள்ள அவரது வீட்டிற்கு நேரடியாக சென்று மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி மனைவி மற்றும் மகன் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். எஸ்.லோகேஷ்வரா. குடும்பத்தி னருக்கு ஆறுதல் தெரிவித்தார்.


இந்த இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன். கழகப் பொருளாளர் பாராளுமன்ற உறுப்பினர் டி. ஆர். பாலு கழக முதன்மைச் செயலாளர் கே. என். நேரு. விவசாயத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம். சிறு குறு தொழில்துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் தென் சென்னை பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ். காரம்பாக்கம் கணபதி. ஏ.வி.எம். பிரபாகராஜா. எஸ். ஆர். ராஜா. இ. . கருணாநிதி. எஸ். சுதர்சனம். தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி. சென்னை துணை மேயர் மு. மகேஷ் குமார். புனித தோமையர் மலை ஒன்றிய சேர்மன் சங்கீதா பாரதி ராஜன். சென்னை மாநகராட்சி சேர்மன்கள். எஸ். வி. ரவிச்சந்திரன்.இ. மதியழகன்.இரா. துரைராஜ். கிருஷ்ண மூர்த்தி.

தாம்பரம் மாநகராட்சி சேர்மன்கள். காமராஜ். வே. கருணாநிதி. சென்னை தெற்கு மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் மனோகரன். பாலவாக்கம் த.விஸ்வநாதன். பொருளாளர் பாஸ்கரன். எம். கே. ஏழுமலை. ஆ. ஹரி கிருஷ்ணன். ஜெ. இ.பாண்டியன். ஒன்றிய கழக செயலாளர் ஜி வெங்கடேசன். ஜி. கே. ரவி தாம்பரம் பகுதிக்காக செயலாளர் த. ஜெயக்குமார்.பம்மல் கருணாநிதி.ஒன்றிய துணை சேர்மன் பி. பிரசாத்

அன்னாரது இறுதி ஊர்வலம் 23ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது இதில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன். முன்னாள் அமைச்சர் பொன்முடி.

மேலும் ஒன்றிய கழக நிர்வாகிகள் சித்தாலப்பாக்கம் எஸ்.ரவி.எஸ்.கோபு து.த. எச். டி. போஸ்.கு. வேணுகோபால். சமாதான நல்லமுத்து. டில்லி பாபு. ஆர். சொக்கலிங்கம். ஜி. எம். எஸ். ஏழுமலை. கே. குமார். ஒ. கே. எஸ். சதீஷ். டி. எஸ். பாரதிராஜன். கே. சாமிநாதன். விஷால் சந்திரசேகர். ஊராட்சி மன்ற தலைவர்கள் வேங்கைவாசல் ஜெயச்சந்திரன். ஜல்லடியன்பேட்டை த. அமித்.கோ. முருகவேல். நன்மங்கலம் கிரி. திருசூலம் மாரிமுத்து. திருவஞ்சேரி ஜனனி சுரேஷ். மதுரபாக்கம் மு.வேல் முருகன். எஸ் கோபு. கே. வி. கார்த்திகேயன். சந்தோஷபுரம் அன்பு. முடிச்சூர் விநாயகமூர்த்தி. ஒன்றிய கவுன்சிலர்கள் கல்பனா சுரேஷ். மோகனப்பிரியா சரவணன். கேசவன் ரவி. பன்னீர்செல்வம். அமுதா வேல்முருகன். ஜாய்ஸ் செல்வராஜ்.சி. சரவணன். மற்றும் உள்ளாட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் கிளைக் கழக செயலாளர் கழக உடன்பிறப்புகள். மற்ற சமுதாய அமைப்பினர். வியாபாரி சங்கங்கள். பொது நிறுவன சங்கங்கள் ஊழியர்கள். மேடவாக்கம் ஊராட்சி மன்ற ஊழியர்கள். உறவினர்கள் உட்பட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

நிறைவாக குடும்பத்தின் சார்பாக இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ் நன்றி கூறினார்.



மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டம் கே. எஸ். நகர் பகுதியில் மழையால் சிதிலமடைந்துள்ள சாலைகளை சீரமைக்கும் பணி,தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் பெருநகர சென்னை மாநகராட்சியால் துரிதமாக நடந்து வருகிறது. இப்பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், மாதவரம் மண்டலம் 3 உதவி செயற்பொறியாளர் குமாரசாமி, 23 அ வட்டச் செயலாளர் வி. ஆர்.குப்பன், உதவிப் பொறியாளர் அருண், வட்ட நிர்வாகிகள் ராமச்சந்திரன், உசேன் மைதீன், பார்பன், முத்துகிருஷ்ணன், ஹரி, வினோத் ஆகியோர் நேரில் பார்வையிட்டு துரிதப்படுத்தினார்கள். உடனுக்குடன் சாலையை சீரமைத்து கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.



திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பழவேற்காடு முகத்துவாரம் பகுதியில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் மணல் திட்டுக்கள் உருவாவதை தடுக்கும் வகையில் நடைபெறும் நிரந்தர முகத்துவாரம் அமைக்கப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மீனவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக கேட்டறிந்து உரிய தீர்வுக்கான சம்மந்தப்பட்ட துறை அமைச்சர் உள்ளிட்ட துறை உயர் அலுவலர்களிடம் தெரிவிக்கப்படும் என தெரிவித்தார். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கே.பி.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், துரை சந்திரசேகர்எம்.எல்.ஏ ஒன்றிய செயலாளர் மு.முரளிதரன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்

### 2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு

# தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு மறு ஆய்வு செய்யப்படும்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிக்கை!



சென்னை, அக்.26-

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 15.10.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு குறித்த உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு குறித்து சமூக ஊடகங்களிலும், பொது வெளியிலும் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் இப்பொருள் குறித்து சில விவரங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகி றேன்.

தற்போது தமிழ்நாட்டில் உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் சதவீதம் இந்தியாவிலேயே அதிகபட்சமாக உள்ள நிலையில், மேலும் அதிகமான எண்ணிக்கையில் உயர்கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் துவக்கப்படுவதற்கான தேவை உள்ளது என்பதை அனைவரும் அறிவோம்.

இந்தச் சூழ்நிலையில் தற்போது இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவ னங்கள், மாநில தனியார் பல்கலைக்கழகங்களாக உயர விழையும்போதும், புதிதாக தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்குவதற்கும் தற்போதுள்ள சில வழிமுறைகளை எளிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டது.

**உரிய சட்ட பாதுகாப்புகள்!**

அதேசமயம் இச்சட்டத்திருத்தத்தில் இவ்வாறு தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாகும்போது அதனால் மாணவர்கள் நலனோ, பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் நலனோ, எந்த வகையிலும் பாதிக்கப்படாத வண்ணம் உரிய சட்ட பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உயர்கல்வியை பொறுத்தவரை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்ந்துவரும் தமிழ்நாட்டில், தற்போதுள்ள தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டம் 2019, பிரிவு 4இன் படி, தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு குறைந்தபட்ச நில அளவு 100 ஏக்கர் தொடர்ச்சியான நிலம் தேவைப்படுகிறது.

ஆனால் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் அத்தகைய மிகப் பெரிய அளவிலான தொடர்ச்சியான நிலத்தை அடையாளம் காண்பது மிகவும் கடினமாக உள்ளது.

எனவே, வேகமாக நகரமயமாகி வரும் தமிழ்நாட்டில் நிலங்களின் மதிப்பும் உயர்ந்து வருவதால் புதிய பல்கலைக்கழகங்களைத் தொடங்குவதற்கும், பெரிய கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக தங்களை மாற்றிக் கொள்ள / தரம் உயர்த்திக் கொள்ள விழையும் போதும் மேற்படி குறைந்தபட்ச நில அளவின் தேவை ஒரு சவாலாக உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் பிற அண்டை மாநிலங்களின் தனியார் பல்கலைக்கழகங்களின் சட்டங்களுக்கு இணங்க, நிலத்தின் அளவு குறைக்கப்பட்டால், பல்கலைக்கழகங்களாக மாற விரும்பும் தனியார் கல்வி நிறுவனங்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும் என்ற கருத்துகள் பெறப்பட்டன.

இதன் மூலம், புதிய தனியார் பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் அமைவதையும், விதிமுறைகளின்படி தகுதியுள்ள தனியார் கல்லூரிகள் மாநில தனியார் பல்கலைக்கழகங்களாக மாற்றம் பெறுவதையும் ஊக்குவிக்க முடியும். எனவே, மாணவர் சமூகத்தின் நலனுக்காகவும், மாநிலத்தில் உயர்கல்வியை மேலும் மேம்படுத்தவும், தமிழ்நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்குத் தேவையான நிலங்கள் தொடர்பான விதி முறைகளை எளிமைப்படுத்த இந்த சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

**சமூகநீதி – உயர்கல்வியில் ஆழ்ந்த அக்கறை கொண்ட திராவிட மாடல் அரசு!**

இந்தப் புதிய சட்டமுன்வடிவின்படி குறைந்தபட்ச நில அளவு கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது;

மாநகராட்சி - 25 ஏக்கர், நகராட்சி அல்லது பேரூராட்சி - 35 ஏக்கர், பிற பகுதிகள் - 50 ஏக்கர்.

சமூக நீதியிலும் உயர் கல்வி மேம்பாட்டிலும் ஆழ்ந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்ட திராவிட மாடல் அரசு, எந்த நிலையிலும் கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாது. ஆசிரியர் நியமனம் மற்றும் மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீட்டை பின்பற்றுவது, கல்விக் கட்டணத்தை அரசே நிர்ணயிப்பது, பணியாளர் நலனை பாதுகாப்பது போன்ற அம்சங்களை உத்தரவாதப்படுத்தியும், தமிழ்நாட்டின் பாரம்பரிய கல்லூரிகள் அடுத்த உயர்நிலையை எட்டுவதை மனதில் கொண்டு இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அதேசமயம் மாநில இடஒதுக்கீட்டு உரிமையை கருத்தில்கொள்ளாத நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு இதுகாறும் நம் அரசு அனுமதி அளிக்கவில்லை என்பதையும் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

இருப்பினும், இப்பொருள் குறித்து சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலும், சமூக ஊடகங்களிலும், பொது வெளி யிலும் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையிலும் இந்தச் சட்ட முன்வடிவு குறித்து கல்வியாளர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள், கல்வித் துறை அலுவலர்கள் ஆகியோரின் கருத் துக்களைப் பெற்று, அதன் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கை தொடரலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி இந்தச் சட்டமுன்வடிவு திரும்பப் பெறப்பட்டு உரிய மறு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### புழல் எம். நாராயணன் முன்னிலையில்

# மாதவரம் 23 அ வட்டம் கே. எஸ்.நகரில் சாலைகள் சீரமைக்கும் பணி!

## உதவி செயற்பொறியாளர் குமாரசாமி, வட்டச் செயலாளர் வி.ஆர். குப்பன் பணிகளை துரிதப்படுத்தினர்!

மாதவரம், அக். 26-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 23 அ வார்டு பகுதியில் பருவ மழை காரணமாக சேதம் அடைந்துள்ள சாலைகளை புணரமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில்,மாதவரம் வடக்கு பகுதி 23 அ வார்டுக்குட்பட்ட கே. எஸ். நகர் மற்றும் காவாங்கரை பகுதிகளில் உள்ள சாலைகள் பருவ மழை பெய்துள்ள காரணத்தினால் பல இடங்களில் சிதிலமடைந்து காணப்பட்டது. இது சம்பந்தமாக 23 அ வட்டச் செயலாளர் வி. ஆர்.குப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் நேரில் சென்று எந்தெந்த சாலைகள் பழுதடைந்து, போக்குவரத்திற்கு சிரமமான நிலையில் உள்ளது என்பதை கண்டறிந்து அதை உடனடியாக சரி செய்ய வேண்டும் என்று மாதவரம் மண்டலம் 3 அலுவலர் அவர்களுக்கு தகவல் கொடுத்து, அதன் பேரில் குழியாக உள்ள சில சாலைகள் சீரமைக்கும் பணி துரித கதிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மாதவரம் மண்டலம் 3 மண்டல அலுவலர் உத்தரவின் பேரில் மண்டல உதவி செயற்பொறியாளர் குமாரசாமி அவர்களின் மேற்பார்வையில் கண்ணப்பசாமி நகர் பகுதியில் உள்ள சாலைகள் சீரமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

கே. எஸ். நகர் 19வது தெரு திருமலை நகரில் நடைபெற்று வரும் பணியை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில், மண்டல உதவி செயற்பொறியாளர் குமாரசாமி, உதவி பொறியாளர் அருண், வட்டச் செயலாளர் வி. ஆர் .குப்பன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார்கள். சில இடங்களில் குண்டும் குழியுமான சாலைகள் சிமெண்ட் கலவை மற்றும் கருங்கற்க்கள் கொண்டு ஜேசிபி இயந்திரங்கள் மூலம் சமன் செய்யப்பட்டு போக்குவரத்திற்கு ஏதுவான சாலைகளாக மாற்றப்பட்டது.

கே. எஸ்நகர் 1வது குறுக்கு தெரு மற்றும் பிரதான சாலைகளில் மின்சார கம்பிகளில் ஒட்டினார் போல் உள்ள மரங்களை வெட்ட வேண்டும் என்று பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, மின்சார வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் நேரடியாக கே. எஸ். நகர் பகுதிக்கு வருகை தந்து மின் கம்பிகளில் சிக்கி உள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்தினார்கள்.

கே எஸ் நகர் 1வது குறுக்கு தெருவில் சென்னை குடிநீர் வடிகால் வாரிய குழாய் உடைந்துள்ளதாக வந்த புகாரை குடிநீர் வடிகால் வாரிய செயற்கு பொறியாளருக்கு தகவலாக அனுப்பிய தன் பெயரில், உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகை தந்த உதவி பொறியாளர் உடனடியாக உடைந்திருந்த குடிநீர் குழாயை பார்வையிட்டு உடனடியாக சரி செய்து தருவதாக உறுதி அளித்தார்.

இந்த ஆய்வின்போது 23 அ வட்ட கழக நிர்வாகிகள் ராமச்சந்திரன், உசேன் மொய்தீன், பார்பன், முத்து கிருஷ்ணன், ஹரி, வினோத் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

சாலைகள் மற்றும் மின்சாரம் , குடிநீர் பிரச்சினைகளை தகவல் தெரிந்தவுடன் வருகை தந்து தீர்த்து வைத்த திராவிட மாடல் அரசின் முதலமைச்சர், கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், கழகத்தினருக்கும், ஊழியர்களுக்கும் பொதுமக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.



சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தனது அறுபதாவது பிறந்த தின மணி விழாவை முன்னிட்டு மனைவி ஜி.மல்லிகாவுடன் சென்று மாவட்ட கழக செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனத்திடம் வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி. சாந்தி சுதர்சனம் உள்ளார்.